**அரசின் நிதிக்கூற்றுக்கள் - 2018**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசின் நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 பூலை 17 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையில் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அரசின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமைகளை புலப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

---

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் நிதி அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் அரசின் வருமானங்கள்,

செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அரசின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது..

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பின்வரும் விடயங்கள தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) கடந்த வருடத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் அரசின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள 1.6.1.1 (அ)(i) முதல் (iv) வரை, 1.6.1.1 (அ)(vi), 1.6.1.1 (ஆ), 1.6.1.2 (அ)(i) மற்றும் 1.6.1.5 ஆகிய பந்திகளுக்குரிய பரிந்துரைகள் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரை

### 1.6.1 அரச கடன்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசினால் செலுத்த வேண்டிய கடன் மீதி ரூபா 11,276,281 மில்லியன் ஆக இருந்த போதிலும், தெரிவு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட கீழே குறிப்பிடப்பட்ட விடயங்களின் பிரகாரம் அம்மீதி ரூபா 828,377 மில்லியன் குறைவாக கணக்குகளில் குறிப்பிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (i) அரசின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட திறைசேரி பிணை முறிகள் தொடர்பான கணக்கீட்டு கொள்கை 2016 ஆம் ஆண்டு முதல் சீராக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் திறைசேரி பிணை விநியோகத்தின் போது அவற்றின் தேறிய பெறுமதிக்குப் பதிலாக முகப்பு பெறுமதிக்கு கணக்கீடு செய்தல் | கணக்கீட்டு கொள்கையின் பிரகாரம் கணக்கு வைக்க வேண்டியமை | 2016 ஆம் ஆண்டிற்கு முன்னர் வெளியிடப்பட்ட பிணை முறிகளுக்கு உரிய ஆகக் குறைந்த விலை அந்த பிணை முறிகள் முதிர்வடையும் வருடத்தின் சீராக்கம் செய்வதற்கும் அதன் கணக்குகளில் பதிவு செய்வதற்கு அந்த பிணைமுறிகளின் முகப்பெறுமதியை |

| | | | |
|---|---|---|---|
| | ஆரம்பிக்கப்பட்டிருந்தன. எவ்வாறெனினும், 2016 ஆம் ஆண்டிற்கு முன்னர் வெளியிடப்பட்ட திறைசேரி பிணை முறிகளின் முகப்புப் பெறுமதி தொடர்ந்தும் கணக்குகளில் சீராக்கம் செய்யப்படாததன் காரணமாக 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நிதிக்கூற்றுக்களில் திறைசேரி பிணை முறிகளுக்கு உரிய மொத்தப் பொறுப்புக்கள் ரூபா 344,306 மில்லியன் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | காண்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | அரசினால் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கை செய்யப்பட்ட கடப்பாடுகளின் கீழான 08 உடன்படிக்கைகளுக்குரிய 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 366,126 மில்லியனான கடன் மீதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய அனைத்து தகவல்களும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்கள் நாளது வரையாகவும் சரியாகவும் சமர்ப்பிக்கப்பட வேண்டியமை. | அந்த கடன் தொகையின் கீழ் உரிய செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்தப்பட்ட அரச முயற்சி நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்யப்பட வேண்டிய பொறுப்பொன்றானமையால் அந்த பெறுமதிகள் குடியரசின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுவதில்லை. |
| (iii) | மேலே குறிப்பிடப்பட்ட 08 கடன் உடன்படிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட கடன் மீதிகளிலிருந்து ரூபா 172,517 மில்லியன் அம்பாந்தோட்டை துறைமுகத்தை நிர்மாணிப்பதற்காக அரசினால் பெற்றுக்கொண்ட கடன்களிலிருந்து செலுத்த வேண்டிய மீதியாகும். இது தொடர்பாக துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆீளு.ஃ.ளுநுஊ.ஃ.2017.ஃ.32 மற்றும் 2017 யூலை 20 ஆந் திகதிய ''அம்பாந்தோட்டை துறைமுக சலுகை ஒப்பந்தம்'' என்ற பெயரிலான அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு 2017 ஆகஸ்ட் மாதம் 04 ஆந் திகதி அமைச்சரவை | உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடனை கணக்கு வைத்தல் உரிய முறைப்படி மேற்கொள்ளப்பட வேண்டியமை. | 2017 ஆம் ஆண்டு வரையிலும் கடன் கணக்கு வைத்தல் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2017.07.25 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க பொது திறைசேரி மூலம் குறித்த கடன் சேவையானது மாத்திரம் இடம்பெறும்.<br><br>அவ்வாறே, அம்பாந்தோட்டை துறைமுகத்திற்காக பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் தொகை இலங்கை துறைமுக அதிகாரசபையின் புத்தகங்களில் பதிவு செய்யப்பட வேண்டுமென |

| | | | |
|---|---|---|---|
| | அங்கீகாரம் கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணத்திற்காக அரசினால் எடுக்கப்பட்ட கடன்களிலிருந்து மேலும் செலுத்த வேண்டிய மீதி மீளக் கொடுப்பனவு பொறுப்பு அக்கடன் உடன்படிக்கை அமுலாகும் திகதி முதல் அமுலாகும் வகையில் பொது திறைசேரியினால் பொறுப்பேற்கப்பட்டிருந்த போதிலும் அக்கடன் மீதி அரசின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அக்கடன் மீதி துறைமுக அதிகாரசபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களிலிருந்து நீக்கப்பட்டிருந்தது. | | நிதி அமைச்சரால் அமைச்சரவைக்கு முன்மொழியப்பட்டிருந்தது |
| (iv) | 2018 ஆம் ஆண்டில் தீர்வையான வெளிநாட்டு கடன் நடவடிக்கைகளுக்குரிய ரூபா 39,416 மற்றும் 50 வெளிநாட்டு கடன் உடன்படிக்கைகளுக்குரிய 2017 ஆம் ஆண்டில் தீர்வையான ரூபா 19,026 மில்லியன் என மொத்தம் ரூபா 58,442 மில்லியன் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் வெளிநாட்டுக் கடனாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளினுள் தீர்வை ஆகிய வெளிநாட்டு கடன் உடன்படிக்கைகளுக்கு உரியதாக கணக்கு வைக்கப்பட்டிராத ரூபா 58,442 மில்லியன் ஆன பெறுமதி போதுமான அளவில் பாதீட்டு நிதியொதுக்கம் இல்லாத காரணத்தால் குறித்த அமைச்சினால் வெளிநாட்டு கடன் நலனாளிகளின் சான்றுப்படுத்தல் இல்லாதிருந்த காரணத்தால் கணக்கு வைப்பதற்கு முடியாதிருந்தது. |
| (v) | அரசின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு 29, வெளிநாட்டுக் கடன் மீதிகள் கூற்றில் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெளிநாட்டு பிரயோக நிதியிலான கடன் மீதியை ரூபாவுக்கு மாற்றும் போது இதுவரை கணக்கீடு செய்யப்படாத மேலே (ளை) குறிப்பிடப்பட்ட கடன் | -மேற்படி - | 2019 ஆம் ஆண்டு முதல் கணக்கு வைக்கப்படாத கடன் தீர்வைகளுக்கு உரிய செலாவணி சீராக்கங்கள் ஆண்டின் இறுதியில் கணக்கு வைக்கப்பட்ட கடன் மீதிகளில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | தீர்வைகளுக்கு உரித்தான 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அந்நியச் செலவாணி சீராக்கமும், கடன் மீதிக்கு இணக்கம் செய்யப்பட்டிருந்தது. அதன் காரணமாக ஆண்டின் இறுதியிலான கடன் மீதி 36 வெளிநாட்டுக் கடன் உடன்படிக்கைகளுக்குரிய ரூபா 9,570 மில்லியன் கூடுதலாகவும் 02 வெளிநாட்டு உடன்படிக்கைகளுக்குரிய ரூபா 13 மில்லியன் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | | எடுக்கப்படும். |
| (vi) | ஓய்வூதிய திணைக்களத்தினால் 2014 ஆம் ஆண்டு முதல் ஓய்வூதிய பணிக்கொடை கொடுப்பனவிற்காக வர்த்தக வங்கிகள் மூலம் பெற்றுக்கொண்ட கடன் தொகையில் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொடுப்பனவு செய்ய வேண்டிய கடன் மீதி ரூபா 65,110 மில்லியனாக இருந்ததுடன், அப்பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்நாட்டுக் கடனாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி - | 2020 ஆம் ஆண்டு முதல் உரிய நிலுவை கடன் தொகை திறைசேரி புத்தகங்களில் உள்ளடக்கி செலவின விடய இலக்கம் 3001 ஆம் இலக்கத்தின் கீழ் அந்த கடன் தவணையை செலுத்துவதற்காக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (vii) | சூரியவெவ சர்வதேச கிரிக்கட் விளையாட்டரங்கினை நிர்மாணிப்பதற்கு ஒப்பந்தக்காரருக்கு செலுத்த வேண்டிய ரூபா 3,950 மில்லியனான நிலுவை தொகை கொடுப்பனவிற்காக இலங்கை துறைமுக அதிகாரசபையினால் மக்கள் வங்கியிடமிருந்து கடன் தொகை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் 17/2660/706/111-1 இன் 2017 நவம்பர் 20 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனம் மற்றும் | -மேற்படி - | 2018 ஆம் ஆண்டின் போது இந்த பொறுப்பு கணக்கு வைப்பதற்காக உரிய நிதிஏற்பாடு பெற்றுக் கொள்ள முடியாதிருந்தமையால் 2019 ஆம் ஆண்டின் போது அதற்கு உரிய நிதிஏற்பாட்டினை மேற்கொண்டு இந்த பொறுப்புகளை கணக்கு வைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | அத்தீர்மானத்தின் பிரகாரம் அக்கடன் தொகை மற்றும் அதற்குரிய வட்டிக் கொடுப்பனவு அப்போதைய நிதி மற்றும் ஊடக அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அதற்குரிய வரவு செலவு திட்ட நிதி மற்றும் ஊடக அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அதற்குரிய வரவு செலவுத் திட்ட நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டு 2018 ஆம் ஆண்டு முதல் அக்கடன் தொகையின் வட்டிக் கொடுப்பனவு ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 03 வருட சலுகை காலத்திற்கு பின்னர் 2021 முதல் கடன் தவணை மீள் கொடுப்பனவு செய்ய வேண்டியேற்பட்டுள்ளது. அப்பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்நாட்டுக் கடனாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | அரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டினுள் வெளிநாட்டுக் கடன் மீள் கொடுப்பனவு பெறுமதி ரூபா 307,015 மில்லியன் ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களின் குறிப்பு 29 இன் பிரகாரம் 2018 ஆம் ஆண்டில் வெள்நாட்டுக் கடன் கொடுப்பனவு பெறுமதி ரூபா 287,060 மில்லியன் மாத்திரமாக இருந்தமை காரணமாக நிதிக்கூற்றுக்கள் மற்றும் அதற்குரிய குறிப்புக்களுக்கு இடையே வெளிநாட்டுக் கடன் மீள் கொடுப்பனவு பெறுமதியில் ரூபா 19,955 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | நிதிக்கூற்றுக்கள் மற்றும் அதற்குரிய குறிப்புக்களின் உள்ளடக்கப் பட்டுள்ள பெறுமதிகள் சரியானதாக இருக்க வேண்டும். | ரூபா 19,955,803,734 ஆன கடன் மீதி செலுத்தல்கள், வெளிநாட்டு கடன் மேல்செலுத்தல்களாக குடியரசின் கணக்கில் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 29 இல் உள்ளடக்கப்படவில்லை. |
| (இ) | அரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த அரச கடன் மீதி (அரசினால் குறுங்கால கடனாக இலங்கை மத்திய வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட | அரச கடன் தொடர்பில் அனைத்து அறிக்கைகளிலும் உள்ளடக்கப்பட்டுள்ள பெறுமதிகள் | குறித்த அறிக்கைகள் இரண்டும். ஒன்றுக்கொன்று வேறுபட்ட முகாமைத்துவம் மற்றும் சட்டத் தேவைப்பாடுகளை |

| | | |
|---|---|---|
| முற்பணம் உட்பட) ரூபா 11,467 மில்லியனாக இருந்த போதிலும் இலங்கை மத்திய வங்கி தகவல்களின் பிரகாரம் அத்திகதியில் கடன் மீதி ரூபா 11,977 மில்லியனாக இருந்தமையால் பொது திறைசேரி மற்றும் இலங்கை மத்திய வங்கி பேணப்படும் தகவல்களுக்கு இடையே அரச கடன் மீதிகளில் ரூபா 510 மில்லியன் வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | ஒன்றுக்கொன்று ஒப்பிடப்பட்டு அதற்குரிய இணக்கக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியமை. | பூர்த்தி செய்யும் பொருட்டு ஒன்றுக்கொன்று வேறுபட்ட தத்துவங்களை ஈடுபடுத்தி தயாரிக்கப்படுகின்றமையால் அந்த கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் மற்றும் அந்த தகவல்கள் சமர்ப்பிக்கப்படும் விதத்தில் வேறுபாடுகள் காணப்படுகின்றது. |

### 1.6.2 உப கடன்

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2018 சனவரி 01 ஆந் திகதி வரை வழங்கப்பட்டிருந்த உப கடன் ரூபா 181,247 மில்லியனாக இருந்ததுடன் ஆண்டின் ரூபா 11,866 மில்லியன் உப கடனாக வழங்கப்பட்டிருந்தது. அதில் ஆண்டினுள் அறவீடுகள் ரூபா 25,584 மில்லியன் மாத்திரமாக இருந்ததுடன் ஏனைய சீராக்கத்துடன் (அந்நியச் செலவாணி மாற்றம்) 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் உப கடன் மீதி ரூபா 167,529 மில்லியனாக இருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கோல்டன் கீ வைப்பாளர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்காக தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சிற்கு 2302 ஆம் இலக்க செலவின விடயத்தின் கீழ் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டில் ரூபா 4,989 மில்லியன் மற்றும் 2017 ஆம் ஆண்டில் ரூபா 2,500 மில்லியனாக மொத்தம் ரூபா 7,489 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. அதற்காக உப கடன் உடன்படிக்கைகளுக்கு வருதல் அல்லது உப கடனாக கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் இதனால் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட உப கடன் மீதி ரூபா 7,489 மில்லியனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | உப கடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடல் மற்றும் கணக்கு வைத்தல் உரிய முறையில் மேற்கொள்ளப்பட வேண்டியமை. | உப கடன் உடன்படிக்கையை கைச்சாத்திடும் பணிகள் நிறைவு செய்யப்பட்டு உப கடனாககணக்கு வைப்பதற்காக அனுப்பப்பட்டுள்ளதாக அரச முயற்சிகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அரச முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் இலங்கை மத்திய வங்கியினால் 2019.04.01 ஆந் திகதிய கடிதத்தில் உபகடன் ஒப்பந்தமொன்றுக்கு கைச்சாத்திடுவது நிராகரிக்கப்பட்டதாக அரச முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் காண்பிக்கப்பட்டுள்ளது. உப கடன் உடன்படிக்கையை கைச்சாத்திடாது உப கடன் கணக்குவைத்தல் இயலுமை இல்லாதிருந்தமையால் உப கடனாக இந்த தொகை கணக்கு வைப்பதற்கு முடியாது உள்ளது. |

| | | | நிறுவனம் | வேறுபாடு | வேறுபாட்டிற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| (ஆ) | 18 உப கடன் உடன்படிக்கைகளுக்குரிய 18 இற்குரிய 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட கடன் மீதிகளில் நேர் கடன் உறுதிப்படுத்தலுடன் ஒப்பிடும் போது உப கடன் மீதிகள் ரூபா 64 மில்லியன் கூடுதலாகவும் ரூபா 93 மில்லியன் குறைத்து நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | சரியாகவும் நாளதுவரையாகவும் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்பட வேண்டும். | ------------- | ---------------- | ----------------------- |
| | | | | ரூபா | |
| | | | NWS & DB ADB 3348 | 10,502,894 | நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சின் பிரதான கணக்காளரின் இலக்கம் 2/5/DE மற்றும் 2018.12.31 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டின் உப கடன் விடுவித்தல் சரியாக கணக்கு வைக்கப்பட்டுள்ளது. |
| | | | HDFC/NHDA | 3,410,430 | உரிய திருத்தங்களை மேற்கொள்வதற்கு அந்த நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| | | | Central Bank | 50,000,000 | இந்த தவறை திருத்துவதற்கு 2019.05.03 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| | | | | ----------------- | |
| | | | | 63,913,324 | |
| | | | | ======= | |
| | | | **நிறுவனம்** | **வேறுபாடு** | **வேறுபாட்டிற்கான காரணம்** |
| | | | ------------- | ---------------- | ----------------------- |
| | | | | ரூபா | |
| | | | Colombo Municipal Council | 93,186,748 | உரிய திருத்தங்கள் மேற்கொள்வதற் |

| | | | |
|---|---|---|---|
| ADB 3348 | | கு அந்த நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் இந்த வேறுபாட்டினை திருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. |
| People's Bank SMEDeF | 363,310 | -மேற்படி- |
| | ---------------- | |
| | 93,550,058 | |
| | ======= | |

**1.6.3 அரசிற்கு சொந்தமான வியாபாரங்களின் மூலதன பங்களிப்பு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் வெவ்வேறு அரச முயற்சிகளில் கூறிய அரசின் முதலீடுகளின் பெறுமதி ரூபா 587,321 மில்லியன் ஆக இருந்த போதிலும் அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதனையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் முதலீட்டு பெறுமதி ரூபா 1,625.3 மில்லியன் கூடுதலாகவும் ரூபா 30,430.6 மில்லியன் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது. | சரியானதும் நாளதுவரையாக்கப்பட்டதுமான அறிக்கைகள் மற்றும் புத்தகங்கள் பேணிச் செல்லப்பட வேண்டியமை. | **(அ) <u>அரசிற்கு சொந்தமான வியாபாரங்களின் மூலதனப் பங்களிப்பினை அதிகரித்துக் காண்பித்தல்</u>**<br><br>(i) <u>இலங்கை தேயிலை சபை</u><br>நிறுவனத்தின் நிதி நிலைமை கூற்றின் அறிக்கையிடப்பட்டுள்ள ரூபா 672,012,202 தொடர்பில் விசேட கவனம் செலுத்தி திறைசேரியின் மூலதன பங்களிப்பாக சரியான பெறுமதியை இனங்காணுவதற்கு எதிர்பார்க்கின்றேன்.<br><br>(ii) <u>நகர அபிவிருத்தி அதிகாரசபை</u><br>அதிகாரசபைக்கு வழங்கப்பட்டுள்ள, ரூபா 1,257,651,060 ஆன தொகையை முதலீடாக திறைசேரி புத்தகங்களில் பதிவு செய்யப்பட்ட போதிலும், அதிகாரசபையினால் இந்த திறைசேரி மானியமாக பதிவு செய்து வருடாந்தம் பதிவழித்தல் இடம்பெறுகின்றது. |

எவ்வாறெனினும், நிதி அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் அவ்வாறான பதிவழிப்பொன்றிற்கான பாராளுமன்றத்தின் அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும்.

(iii) <u>இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்.</u>
வேறுபாட்டிற்கான காரணமாக அமைந்துள்ள ரூபா 10,000,000 மற்றும் தொடர்புடைய சீராக்கங்கள் கூட்டுத்தாபனத்தினால் 2012 ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக அவதானிக்கப்படுவதுடன் மேலதிக தகவல்களை தேடிப்பார்த்து உரிய நடவடிக்கை எடுப்பதற்கு குறித்து வைக்கப்பட்டுள்ளது.

(iv) <u>சிலோன் பிஷிங் லயின் லிமிடட்</u>
உரிய மூலதனத்தின் பெறுமதி திறைசேரியின் புத்தகங்களின் சீராக்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளது.

**(ஆ) <u>அரசிற்கு சொந்தமான வியாபாரங்களின் மூலதனப் பங்களிப்பினை குறைத்துக் காண்பித்தல்</u>**

(i) பொது திறைசேரியினால் கொமர்சியல் வங்கிக்கு மேற்கொள்ளப்பட்ட முதலீட்டுக்காக பெறப்பட்ட இலாபம் வங்கிக்காக வெளியிடப்பட்டுள்ள பங்குகளின் அளவு திறைசேரியின் புத்தகங்களில் பதிவு செய்யப்படாமையின் காரணத்தினால் இந்த வேறுபாடு உருவாகியுள்ளது.

(ii) <u>தேசிய அபிவிருத்தி வங்கி</u>
2018 ஆம் ஆண்டின் தேசிய அபிவிருத்தி வங்கியினால் பொது திறைசேரிக்கு வழங்கப்பட்ட ரூபா 2,611,839

பெறுமதியான இலாப பங்குகளுக்காக வெளியிடப்பட்ட பங்குகள் 19,247 ஆன அளவானது குறித்த வேறுபாட்டிற்கு காரணமாக அமைந்திருந்தது.

(iii) <u>கொட்டகல பெருந்தோட்ட கம்பனி</u>
கொட்டகலை பெருந்தோட்ட கம்பனியினால் 2018.01.09 ஆந் திகதி இடம்பெற்ற இரண்டு பங்குகளில் மூன்று (இரண்டுக்கு மூன்று) ஆன விகிதத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பங்குகள் உப பிரிவு காரணத்தினால் திரண்ட மூலதனம் உயர்வடைதல் நீங்கலாக) திறைசேரிக்கு சொந்தமான பங்குகளின் எண்ணிக்கை 5,700,834 பங்குகளாக உயர்வடைந்திருந்தது. திறைசேரியின் புத்தகங்களில் குறித்த சீராக்கத்தை மேற்கொள்வதற்கு குறித்து வைத்துக் கொள்கின்றேன்.

(iv) <u>பிரதேச அபிவிருத்தி வங்கி</u>
பிரதேச அபிவிருத்தி வங்கியுடன் லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி இணைக்கப்பட்டமை தொடர்பில் மேல் நிர்மாணமாக இணங்கிய ரூபா 4,176,292,999 ஆன பெறுமதி (பங்கொன்று ரூபா 26.43 படி 158,013,356 பங்குகள்) பிரதிநித்துவப்படுத்தும் வகையில் பொது திறைசேரிக்கு வெளியிடப்பட்ட பங்குகளின் பெறுமதி காரணமாக குறித்த வேறுபாடு ஏற்பட்டுள்ளது.

(v) <u>தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை</u>
நீர் மற்றும் கழிவுநீர் செயற்திட்டங்களின் மீள செலுத்தல்கள் அதன் வட்டி கொடுப்பனவுகளுக்காக திறைசேரியினால் வழங்கப்பட்ட நிதியம் சபையினால்

திறைசேரியின் பரிந்துரையின் இல்லாது திறைசேரியின் மூலதன பங்களிப்பாக இனங்காணப்பட்ட காரணத்தால் வேறுபாடு இடம்பெற்றுள்ளது.

(vi) <u>இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்</u>
திறைசேரியின் புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டிருந்த 2016.12.31 ஆந் திகதி வரையிலும் வழங்கப்பட்ட ரூபா 632,659,758 ஆன பெறுமதிக்கு மேலதிகமாக பின்னர் வழங்கப்பட்ட ரூபா 58,502,029 தொகையும் உள்ளடங்களாக ரூபா 691,161,788 தொகை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் 2018.12.31 ஆந் திகதிய நிறைவடைந்த நிதியாண்டினுள் திறைசேரியின் மூலதன பங்களிப்பாக இனங்காணப்பட்டுள்ளது. குறித்த பெறுமதி திறைசேரியின் புத்தகங்களில் சீராக்குவதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளது.

### 1.6.4 நிகழத்தக்க பொறுப்புக்ள மற்றும் கடப்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் திறைசேரி பிணைமுறியின் அடிப்படையில் உள்நாட்டு நிறுவனங்களிடமிரு பெற்றுக்கொண்ட பணத்தை தீர்ப்பனவு செய்வதற்காக அந்த கடன் தவணை மற்றும் வட்டித் தொகைக்கு சமமான தொகையொன்று பொதுத்திறைசேரியால் உயர் கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் 117-02-04-51-2506 ஆம் இலக்க செலவின விடயத்தின் கீழ் வருடாந்தம் | தேவையான அனைத்து தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்கள் நாளதுவரையாகவும் சரியாகவும் சமர்ப்பிக்கப்பட வேண்டியமை. | கடன் தொகைக்காக திறைசேரி பிணைமுறி வெளியிடப்பட்டுள்ளமையால் இது நிதிக்கூற்றுக்களில் நிகழத்தக்க பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த கடன் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் என்பதுடன் அந்த கடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் |

| | | | |
|---|---|---|---|
| | வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்குதல் இடம்பெறுகின்றது. அந்த நிதியங்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த நிதிக்கூற்றினுள் வேறாக காசுப் பாய்ச்சலொன்றாக இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருந்தது. மேற்குறிப்பிடப்பட்டவாறு வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் உள்நாட்டு வணிக வங்கிகள் மற்றும் விசேட வங்கிகளிடமிருந்து பெற்றுக்கொண்ட உள்நாட்டு கடன்களின் 2018 திசெம்பர் 31ஆந் திகதி வரையிலும் 94 கடன் உடன்படிக்கைகளின் கீழ் பெறப்பட்டிருந்த ரூபா 180,121.60 மற்றும் ஒரு கடன் உடன்படிக்கையின் கீழ் பெறப்பட்டிருந்த ஐக்கிய அமெரிக்க டொலர் 35.45 மில்லியனான (ரூபா 6,478.48 மில்லியன்) மீதியொன்று நிதிக்கூற்றுக்களில் நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தது.<br><br>அதற்கமைய கடன் கோவைகளின் பொறுப்பானது முழுமையாக பொறுத்திறைசேரியினால் மேற்கொள்ளப்படும் ரூபா 186,600.08 மில்லியனான உள்நாட்டு வங்கிகளிடமிருந்து பெறப்பட்டிருந்த மேற்படி கடன் மீதியானது பொறுப்பொன்றாக நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அந்த வருடாந்த பொறுப்புக்களின் எல்லையை கணிப்பிடும் போது பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | பொறுப்பொன்றாக காண்பிக்கப்பட்டுள்ளமையால் திறைசேரியினால் நிதிக்கூற்றுக்களின் உள்ளபடியான பொறுப்பொன்றாக இனங்காணப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | 2015 பாதீட்டு முன்மொழிவுக்கமைய அனுமதிப்பத்திரம் பெற்ற வணிக வங்கிகளில் அல்லது விசேட அனுமதிப்பத்திரம் பெற்ற வங்கிகளில் ரூபா ஒரு மில்லியன் அல்லது அதற்கு | தேவையான அனைத்து தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்கள் நாளதுவரையாகவு ம் சரியாகவும் | 2018 ஆம் ஆண்டிற்கான நிதி திணைக்களத்திற்கு சிரேஷ்ட பிரஜைகளின் நிலையான வைப்புக்களுக்கான வட்டி சலுகைகளை செலுத்துவதற்கு கட்டுநிதி |

| | | | |
|---|---|---|---|
| | குறைவாக சிரேஷ்ட பிரஜையொருவரால் பேணிச் செல்லப்படும் நிலையான வைப்புக்களுக்கான 15 சதவீதமான வட்டி வீதமும், 2017 ஆம் ஆண்டு முதல் ரூபா 1.5 மில்லியன் அல்லது அதனை விட குறைவாக பேணிச் செல்லப்படும் நிலையான வைப்புக்களுக்காக 15 சதவீதமான வட்டி வீதமும் செலுத்தப்படும். அந்த வட்டி வீதம் மற்றும் சாதாரண வட்டி வீதமும் செலுத்தப்படும் அந்த வட்டி வீதம் மற்றும் சாதாரண வட்டி வீதம் ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டிற்குரிய பணம், பொதுத் திறைசேரியால் குறித்த வங்கிகளுக்கு மீளளிப்பு செய்யப்பட வேண்டும். எவ்வாறெனினும், 2018 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 07 அரச வங்கிகளுக்கும் 22 தனியார் வங்கிகளுக்கும் செலுத்த வேண்டிய அந்த வட்டி உதவுத் தொகையானது ரூபா 33,198.08 மில்லியனாக இருந்தது. அந்தப் பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிராததுடன், உரிய நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களிலும் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சமர்ப்பிக்கப்பட வேண்டியமை. | கிடைக்காமையின் காரணத்தால் வருடத்தினுள் எவ்வித கொடுப்பனவும் இடம்பெற்றிருக்கவில்லை. |
| (இ) | மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு (மேல் மாகாணம்) 2011 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் நிலுவை ஒப்பந்தப் பொறுப்பினை தீர்ப்பதற்காக 2016 பெப்ரவரி 01 ஆந் திகதி அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நியமிக்கப்பட்ட குழுவொன்றினால் கொடுப்பனவுகளுக்கான பரிந்துரை வழங்கப்பட்டிருந்த ரூபா 3,224 மில்லியனான பெறுமதி அதிகாரசபையின் வருடாந்த நிதிக்கூற்றுக்களினுள் பொதுத் திறைசேரியிடமிருந்து | தேவையான அனைத்து தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்கள் நாளதுவரையாகவும் சரியாகவும் சமர்ப்பிக்கப்பட வேண்டியமை. | 2018 ஆம் ஆண்டின்போது இந்த பொறுப்புக்கள் கணக்கு வைப்பதற்காக தேவையான நிதியேற்பாட்டினை பெற்றுக் கொள்ள முடியாமையின் அடிப்படையில் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. |

பெறவேண்டியதாக உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், அரசின் நிதிக்கூற்றுக்களினுள் பொறுப்புக்களின் கீழ் அந்த பெறுமதி உள்ளடக்கப்பட்டிருந்தது.

### 1.6.5 தொங்கல் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 திசெம்பர் 18 ஆந் திகதி இடம்பெற்ற பொதுநலவாய நாடுகளின் மாநாட்டிற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த 82 வாகனங்களை விற்பனை செய்யும் போது இடம்பெற்றிருந்த ரூபா 400 மில்லியனா நட்டம், 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், அதற்கான காரணங்கள் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்படவில்லை. அவ்வாறே, 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டுவரப்படும் இந்த பெறுமதி தொடர்ந்தும் நிதிக்கூற்றுக்களில் தொங்கல் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தன. | தற்காலிகமாக தொங்கல் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பணத்தை கூடிய விரைவில் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பொது அரச சபை மாநாட்டிற்காக கொள்வனவு செய்யப்பட்ட 82 வாகனங்களை விற்பனை செய்யும் போது இடம்பெற்ற ரூபா 400 மில்லியனான நட்டத்தினை பதிவழிப்பதற்கு அல்லது பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்கள் காணப்படின் அவர்களிடம் அறவிடுவதற்கு தற்போது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளது. |

### 1.6.6 தீர்க்கப்படாத மீதிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டிற்கான அரசின் நிதிக்கூற்றுக்களினுள் நீண்டகாலமாக விளைவற்று காணப்படும் 08 கணக்குகளுக்குரிய ரூபா 1,188.1 மில்லியன் வரவு மீதி மற்றும் 06 கணக்குகளுக்குரிய ரூபா 2,960.0 | நிதிக்கூற்றுக்களிளுள் தீர்க்கப்பட்ட மற்றும் நாளதுவரையாக்கப்பட்ட பெறுமதிகள் உள்ளடக்கப்பட வேண்டியமை, | தொடர்ந்தும் முன்கொண்டு செல்லும் தேவை இல்லாத வரவு மீதிகளுடன் பிரதான பேரேட்டு கணக்கு புத்தகங்களில் பதிவழிப்பதற்கும் செலவு மீதிகளுடனான பிரதான |

| | | |
|---|---|---|
| மில்லியன் செலவு மீதி ஆகியன தீர்க்கப்படாது தொடர்ந்தும் நிதிநிலைமைக் கூற்றினுள் உள்ளடக்கப்பட்டிருந்தது. | | பேரேட்டு மீதிகள் அரச வருமானத்திற்கு செலவு வைத்து கட்டமைப்பிலிருந்து அகற்றுவதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.6.7 வெளிநாட்டு மானியங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) திறைசேரிக்கு அறிவிக்காது 05 நிறுவனங்களால் மீளாய்வாண்டினுள் ரூபா 341 மில்லியன் வெளிநாட்டு மானியங்கள் நேரடியாக உரிய நிறுவனங்களுக்கு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இந்த மானியங்கள் தொடர்பான தகவல்கள் பொது திறைசேரியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிராததுடன், ஏனைய அமைச்சுகள்.்.திணைக்களங்களுக்கு இவ்வாறான உதவிகள் கிடைத்துள்ளனவா என்பது தொடர்பில் உறுதிப்படுத்தும் போதியளவான நடைமுறையொன்று பொது திறைசேரியிடம் இல்லாதிருந்ததாக அவதானிக்கப்பட்டது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் வெளிநாட்டு உதவிகளை பெற்றுக் கொள்ளல் மற்றும் கணக்கு வைத்தல் முறைமைப்படுத்தப்பட வேண்டும். | அரச கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம் 30/94 இல் திருத்தப்பட்ட 2.0 பந்தியின் பிரகாரம் மற்றும் நிதிப்பிரமாணக் கோவையின் XI அத்தியாயத்தில் ஏற்பாடுகளை கருத்திற் கொள்ளாது வெளிநாட்டு வழங்கல் திணைக்களத்தின் முன்னறிவித்தலின்றி நேரடியாக வெளிநாட்டு மானியம் பெற்றுக் கொள்ளும் அரச நிறுவனங்கள் தொடர்பில் பின்வரும் முறையில் நடவடிக்கைகள் மேற்கொண்டு வரிசை அமைச்சிற்கு பொறுப்பான செயலாளர்களுக்கு அறிவுரைகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>(i) சுற்றறிக்கை ஏற்பாடுகளினை கருத்திற் கொள்ளாது நேரடியாக வெளிநாட்டு மானியங்களை முறைமைப்படுத்தி கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு<br>(ii) எதிர்காலத்தில் எந்தவொரு காரணத்தினாலும் வெளிநாட்டு வழங்கல் திணைக்களம் மற்றும் தேசிய பாதீட்டு |

| | | | |
|---|---|---|---|
| | | | திணைக்களத்தின் அறிவித்தல் இல்லாது / அறிவித்தலினை பெற்றுக் கொள்ளாது வெளிநாட்டு மானியங்களை பெற்றுக் கொள்ளாதிருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டினுள் பல்வேறு அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களுக்கு வெளிநாட்டு மானியங்களாக கிடைக்கும் பணத்தில் குறித்த பணிகளை நிறைவேற்றுவதற்காக ஒவ்வொரு செலவினத் தலைப்புகளின் கீழ் ரூபா 4,097 மில்லியன் கூட்டுத்தொகையான பாதீட்டு நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்த போதிலும், ஆண்டினுள் குறித்த பணிக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது ரூபா 2,183 மில்லியன் அல்லது மொத்த நிதியேற்பாட்டில் 53.3 சதவீதம் மாத்திரம் ஆகும். அவ்வாறே மீளாய்வாண்டினுள் வெளிநாட்டு மானிய செயற்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 1,914 மில்லியன் பாதீட்டு நிதியேற்பாடு எஞ்சியுள்ள போது ஆண்டின் இறுதியில் ரூபா 1,322 மில்லியன் தொகை குறித்த பணிகளுக்காக பயன்படுத்தப்படாது வெளிநாட்டு மானியங்களாக கணக்கு வைக்கப்படாது பொது வைப்புக் கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | வெளிநாட்டு மானியங்களை பயன்படுத்துதல் முறைமைப்படுத்தப்பட வேண்டியமை | இந்த நிலைமையை தடுத்தல் / குறைத்தல் பொருட்டு கட்டுப்பாட்டிலிருந்து விலகிய சந்தர்ப்பங்கள் நீங்கலாக வெளிநாட்டு மானியங்களின் அடிப்படையில் ஏற்பாடு செய்யப்பட்ட பாதீட்டு ஒதுக்கங்களின் குறை பயன்பாடு தொடர்பில் ஏற்றுக்கொள்ளக் கூடிய காரணங்கள் குறித்த அமைச்சின் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என அமைச்சின் செயலாளர்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.6.8 நிதியல்லாத சொத்துக்கள்

அரசின் நிதிக்கூற்றுகளுக்கமைய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதியல்லாத சொத்துக்கள் (Non-Financial Assets) பெறுமதியானது ரூபா 1,087,398 மில்லியன் ஆகும். அதற்குரிய நிதிக்கூற்று குறிப்பு இலக்கம் 16 இல் உள்ளடக்கப்பட்டுள்ள 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதியல்லாத சொத்துக்கள் தெரிவு அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 93 நிறுவனங்களில் வருடாந்த நிதிக்கூற்றுக்களில் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதியல்லாத சொத்துக்களின் மீதியுடன் இணக்கம் செய்யும் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| (அ) மாதிரி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 27 நிறுவனங்களில் நிதிக்கூற்றுகளில் காணப்படுகின்ற நிதியல்லாத சொத்துக்களின் மீதியின் கூட்டுத்தொகை ரூபா 19,664 மில்லியன் அரசின் நிதிக்கூற்றுக்களில் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | நிதியல்லாத சொத்துக்கள் கணக்கு வைத்தல் முறைமைப்படுத்தப்பட வேண்டும். | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர், கணக்கீட்டு உத்தியோகத்தர் பிரதான நிதி உத்தியோகத்தரினால் குறித்த நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள திறைசேரி புத்தகங்களுடன் இணக்கம் செய்யப்பட்டதாகவும் அவை இணங்குவதாகவும் சான்றுப்படுத்தப்பட்டுள்ளது. முதலாவது குறைநிரப்பு கணக்கின் பொழிப்பினை சமர்ப்பிப்பதற்கு முன்னர் 2010 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதத்தின் இறுதி வரையிலும் அனைத்து கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் குறிப்புகள் திறைசேரி புத்தகங்களில் கணக்கு வைக்கப்பட்டதுடன் இணக்கம் செய்து சான்றுப்படுத்தப்பட்டு உரிய சீராக்கங்களை மேற்கொள்ளல் செலவினங்கள் தலைப்புக்களுக்குரிய பணிகள் மேற்கொள்ளப்படும் பிரதான நிதி உத்தியோகத்தரின் / பிரமான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தெரிவு செய்யப்பட்ட 15 நிறுவனங்களின் நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதியானது ரூபா 15,655 மில்லியனாக இருந்த போதிலும், குறித்த நிறுவனங்களின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் சான்றுபடுத்தப்பட்ட நிதிக்கூற்றுகளில் அந்த மீதியானது ரூபா 2,875 மில்லியன் மாத்திரமாகையால், 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அரசின் நிதிக்கூற்றுக்ளில் நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதியானது ரூபா 12,780 மில்லியனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | தெரிவு செய்யப்பட்ட 19 நிறுவனங்களின் நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதி ரூபா 189,587 ஆக இருந்த போதிலும், குறித்த நிறுவனங்களின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களால் சான்றுபடுத்தப்பட்ட நிதிக்கூற்றுக்களில் அந்த மீதி ரூபா 267,177 மாத்திரமானமையால், 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அரசின் நிதிக்கூற்றுகளில் நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதியில் பின்வருமாறு ரூபா 77,590 மில்லியன் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 151 ஆம் உறுப்புரை | செயற்திட்ட முகாமைத்துவம், இளைஞர் அலுவல்கள் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சிற்கு 2018 ஏப்ரல் 27 ஆந் திகதி எதிர்பாராத சந்தர்ப்பங்கள் நிதியத்திலிருந்து ரூபா 50 மில்லியன் வழங்கப்பட்டிருந்ததுடன், 2019 மே 23 ஆந் திகதி வரையிலும் அவ்வாறு குறைநிரப்பு மதிப்பீடொன்று முன்வைக்கப்பட்டு எதிர்பாராத சந்தர்ப்பங்கள் நிதியத்திலிருந்து பெற்றுக்கொண்ட முற்பணத் தொகையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>அதற்கமைய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுகளினுள் உள்ளடக்கப்பட்டுள்ள மூலதனத்திலான மாற்றங்கள் கூற்றில் எதிர்பாராத சந்தர்ப்பங்களுக்கான நிதியத்தின் மீதியானது 500 மில்லியனாக வேண்டிய போதிலும், ரூபா 450 மில்லியன் மாத்திரம் காண்பிக்கப்பட்டிருந்தது. | இலங்கை சனசாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை | 2018 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் காணப்பட்ட அரசியல் நிலைமையின் காரணமாக குறைநிரப்பு மதிப்பீடொன்றினை சமர்ப்பிக்கும் இயலுமை மட்டுப்படுத்தப்பட்டது. அதனால் எதிர்காலத்தில் குறைநிரப்பு மதிப்பீடொனிறனை சமர்ப்பித்து குறித்த முற்பண தொகையை தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2003 இன் 3 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புகள்) அதிகாரச்சட்டத்தின் 3(அ) பந்தி | முன்னைய ஆண்டின் மற்றும் மீளாய்வாண்டினுள் அந்த ஒவ்வொரு வருடங்களினதும் இறுதியிலான பாதீட்டு விலகல் அந்த ஆண்டுகளின் மதிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஐந்து சதவீதத்தினை விஞ்சாத வகையில் பேணிச் செல்வதற்கு நிதி அமைச்சு தவறியுள்ளதாக அவதானிக்கப்பட்டது. அதற்கமைய மீளாய்வாண்டின் போது அந்த சதவீதங்கள் முறையே மதிப்பிடப்பட்ட பாதீட்டு விலகளுக்கு இணங்க 7.38 சதவீதம் மற்றும் உள்ளபடியான விலகளுக்கமைய 5.62 சதவீதமும் ஆகும். விபரங்கள் பின்வருமாறு. | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | அரச வருமானம் எதிர்பார்க்கப்பட்டவாறு அதிகரிக்காமையால் மற்றும் டொலரொன்றிற்கு ஒப்பாக ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்தமை மூலம் ஏற்படுத்தப்பட்ட தாக்கம், நாட்டினுள் பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றின் அபிவிருத்தியின் மூலம் வறுமையினை ஒழித்தல் மற்றும் உள்நாடு போன்றே வெளிநாட்டு முதலீட்டு சந்தர்ப்பங்களை பரவலாக்குதல் நோக்குடன் அரச முதலீட்டு சந்தர்ப்பங்களை பரவலாக்குதல் ஆகியவற்றை போன்றே எதிர்பார்க்காத வகையில் இடம்பெறும் அவசர இடர் நிலைமைகள் ஆகியவற்றிற்கு நிவாரணங்களை வழங்குதல் காரணமாக அரச செலவினத்திற்கு ஏற்பட்ட தாக்கம், பாதீட்டு நிலுவை எதிர்பார்த்த மட்டத்தில் பேணுதல் தொடர்பில் தாக்கமொன்று ஏற்படுத்தப்பட்டது. |
| (இ) | 2013 இன் 15 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்பு)(திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 2003 இன் 3 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்பு) அதிகாரச்சட்டம். | ஏதேனுமொரு வருடத்தின் இறுதியில் நிலவக்கூடிய ஆகக்கூடிய பொறுப்புக்களின் பெறுமதி அந்த வருடத்திற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 80 சதவீதத்தினை மிஞ்சக்கூடாது. அந்த எல்லைகளுக்கமைய நிதி அமைச்சு செயற்பட்டுள்ளதாக அமைச்சின் அறிக்கைகளுக்கமைய புலப்பட்ட போதிலும், நிதி நிலைமைக் கூற்றிற்கு புறம்பாக கணக்கு வைக்கப்பட்டுள்ள எனினும், வெவ்வேறு அரச முயற்சிகளுக்குரிய பொறுப்புகளையும் கவனத்திற்கொள்ளும் | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டியமை | (i) ஆண்டினுள் பொறுப்புக்களின் எல்லைகளை கணிப்பிடும் போது பொறுப்புக்களாக கருத்திற் கொள்ளப்படுவது திட்டவட்டமாக இனங்காணப்பட்ட குறித்துரைக்கப்பட்ட கொடுப்பனவு மேற்கொள்ளும் பொறுப்புக்களாகும் 2013 இன் 3 ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவம் (பொறுப்பு) அதிகாரச்சட்டத்தின் (திருத்தப்பட்ட) இலக்கம் 3 (எ) பிரிவின் பிரகாரம் அரசின் செலவின எல்லை அந்த |

போது அந்த உரிய எல்லைகள் மீறப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

நிதியாண்டிற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் 80 சதவீதத்தினுள் இருக்க வேண்டிய போதிலும் அந்த அதிகாரச்சட்டத்தின் இலக்கம் 3(உ) பிரிவில் காண்பிக்கப்படும் வகையில் அரசின் நிகழத்தக்க பொறுப்பு எல்லை கடந்த மூன்று வருடங்களில் மொத்த தேசிய உற்பத்தியின் சராசரியின் 10 சதவீதத்தினுள் இருக்க வேண்டும். அதன் பிரகாரம் அரசின் பொறுப்புக்கள் மற்றும் நிகழத்தக்க பொறுப்புக்களுக்காக வேறுவேறாக எல்லைகள் விதிக்கப்பட்டுள்ளன.

(ii) ஐந்தொகையின் புறம்பாக கணக்கு வைக்கப்பட்டுள்ள வெளிநாட்டு கடன் இலங்கை மின்சார சபை, இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை கம்பனி ஆகிய அரச வியாபார நிறுவனங்களுக்கு உரிய நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்யப்படுகின்றமையால் இந்த பெறுமதி குடியரசின் கணக்குகளில் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுவதில்லை. அதற்கமைய 366 பில்லியன் ஆன தொகையும் மொத்த பொறுப்புக்கள் எல்லைக்கு உள்ளடங்காது.

(iii) 2016 ஆம் ஆண்டு முதல் திறைசேரி பிணைமுறையின் முகப்பெறுமதிக்கு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் கணக்காய்வு அறிக்கையின் குறைத்து கணக்கு வைக்க திறைசேரி பிணைமுறிகளின் நீதியாக காண்பிக்கப்படும் ரூபா 344 பில்லியன் தொகை, 2016 ஆம் ஆண்டினுள் காண்பிக்கப்பட்டுள்ள திறைசேரி பிணைமுறிகளின் முகப்பெறுமதி மற்றும் புத்தகத்தின் பெறுமதி ஆகியவற்றுக்கிடையேயான வேறுபாடாகும்.